# *செயற்திறன் அறிக்கை 2021*

## *உணவு ஆணையாளர் திணைக்களம்*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் தோற்றுவாய் | 33-37 |
| 2. | முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் | 38 |
| 3. | நிதிசார் செயற்திறன் | 39-47 |
| 4. | செயற்திறன் குறிகாட்டிகள் | 48 |
| 5. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைவதன் செயற்திறன் | 49 |
| 6. | மனித வளத்தின் தோற்றுவாய் | 50-51 |
| 7. | இணக்க அறிக்கை | 52-59 |

## (01) நிறுவனத்தின் தோற்றுவாய்

### அறிமுகம்

"ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாப்பான, சீரான, சத்தான தானிய உணவுகள்" என்ற தொலைநோக்குடன், உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் வர்த்தக அமைச்சின் விடயப் பரப்பின் கீழே 2021 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டு இத்திணைக்களம் இந்நாட்டின் அதி உன்னதமான வகிபாகத்தினை நிறைவேற்றும் திணைக்களமாக மாறியுள்ளது.

2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொடங்கிய கொவிட் 19 தொற்றுநோய் 2021 ஆம் ஆண்டு முழுவதும் தொடரும் என்ற உண்மையின் காரணமாக நாடு மூடப்பட்டிருந்தாலும், எவ்வித தடையுமின்றி 40% வரையில் அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைக்கும் நோக்குடன், இந்திய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்பாட்டுக் களஞ்சியசாலை வளாகத்தின் கட்டுமானப் பணிகளினைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் காட்டுத்தீ போல் பரவிய கொவிட்ட 19 இன் மூன்றாவது அலையின் காரணமாக ஏற்பட்ட அவசர நிலையுடன் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களினைத் தொடர்ந்து வழங்குவதன் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்ப பாரிய பணியொன்றினை நிறைவேற்றுவதற்கு உணவுத் திணைகளம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தரவ அரிசி ஆலை உரிமையாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட 3277 மெற்றிக் தொன் வரையிலான அரசியினை சத்தொச ஊடாக நுகர்வோருக்கு வழங்கி சந்தையில் அரிசிப் பற்றாக்குறை காரணமாக ஏற்படக்கூடிய விலைத்தளம்பல்களினைக் குறைத்து அரிசியினைக் கொள்வனவு செய்யும் இயலுமையினை நுகர்வோருக்கு வழங்குவதற்கு முடிந்நதுள்ளதுடன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட சீனி 6205 இலட்சம் ரூபாவை வினைத்திறனுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதன் மூலம் மொத்த விற்பனையாளர்கள் ஊடாக பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் திணைக்களத்தினால் முடிந்தது.

அத்துடன், திணைக்களத்தின் களஞ்சியசாலைகளை நாடளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலமும், திணைக்களத்திற்குச் சொந்தமான தன்யாகம வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள வீடுகளை அப்பிரதேசத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு குறைந்தபட்ச வாடகைக்கு விடுவதன் மூலமும் ஆண்டுதோறும் பாரிய வருமானத்தினை உழைத்து, அதை அரசின் வருவாய்க்கு வரவு வைப்பதற்கு முடிந்துள்ளதுடன், நிலுவை வாடகைப் பணத்தினை வசூலிப்பதற்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டமையினால் இம் முன்னேற்றத்தை அடைவதற்குத் திணைக்களத்தினால் முடிந்துள்ளது. அதேபோல தான்யகம வீடமைப்புத் தொகுதியில் வாடகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் அதன் குத்தகைக்காரர்களினால் இடைக்கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளினை இனங்கண்டு அவ்வாறான வீடுகளில் வசிப்பவரகளினை வெளியேற்றுவதற்கும், நிலுவை வாடகையினை வசூலிப்பதற்கும் சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு முன்னுரிமையினை வழங்கி அப்பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றினை தீர்ப்பதற்கு முடிந்துள்ளது.

திணைக்களத்திடமுள்ள குறைந்தபட்ச வளங்களிலிருந்து ஆகக்கூடிய பயனினைப் பெறுதல் மற்றும் குறைந்த பணியாளர்கள் அதிகபட்ச செயற்திறனுடன் செயற்படுதல் திணைக்களம் பெற்றுக்கொண்ட இம்முன்னேற்றத்திற்கு உதவியாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட பாதகமான நிலைமைகளின் மத்தியிலும் திணைக்களத்தினால் அனைத்து செயற்பாடுகளையும் தொடர்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுக்க முடிந்தது

**தொலைநோக்கு**

***"ஒவ்வொரு வீட்டிலும்***
***பாதுகாப்பான,***
***சீரான, சத்தான***
***தானிய உணவுகள்"***

***பணிக்கூற்று***

*"தானிய உணவுப் பொருட்களின் சந்தை வாய்ப்பு,*
*நுகர்வோர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதி மற்றும் நுகர்வோர் கொள்வனவு செய்யும் இயலுமையினைப் பாதுகாப்பதற்கு உணவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் தொடர்புடைய*
*பங்குதாரர்கள், திணைக்களத்திற்கு உரித்தான சொத்துக்கள்*
*மற்றும் விளைத்திறனுடனான அர்ப்பணிப்பினைக் கொண்ட பணியாளர் குழுக்களுடன் சிறந்தவாறு ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக உணவு ஆணையாளர் திணைக்களத்தின்*
*தொலைநோக்கினை அடையப் பெறுதல்."*

**பிரதான செயற்பாடுகள்**

1. தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (SAARC) கொழும்பு சாசனம் மற்றும் 16 வது மகாநாட்டுக் கூட்டத்தின் பிரகாரம் 8000 மெட்றிக் தொன் விசேட அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

   தெற்காசியப் பிராந்திய நாடுகளின் அவசர மற்றும் அநர்த்த வேளைகளில் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியவாறு 8000 மெட்றிக் தொன் அரிசி இருப்பொன்றினை, இலங்கையினால் முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என அதன் அமைப்பின் 16 வது மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

2. 2008/08/27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நாடுபூராவுமுள்ள உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகளில் 100,000 மெட்றிக் தொன் பாதுகாப்பான அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

   2008/08/27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நெருக்கடியான சூழ்நிலைகளில் பாவனைக்கு எடுப்பதற்கென 100,000 மெட்றிக் தொன் பாதுகாப்பான அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் உணவுத் திணைக்களம் மீளமைக்கப்பட்டுள்ளது.

3. **சந்தையில் அரிசி கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.**

   சந்தையில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படுவதனூடாக ஏற்படக்கூடிய விலையேற்றங்கள் தொடர்பில் அத்தியாவசியமான வேளைகளில் சந்தைக்கு இருப்புக்களை விடுவித்து அரிசியினைக் கொள்வனவு செய்யும் இயலுமையினை வாடிக்கையாளருக்கு வழங்குதல்.


4. **நிறுவனத்தின் வளங்களினை சிறந்தவாறு முகாமை செய்வதற்கு உரிய பங்குதாரர்களுடன் (Stake Holders) சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.**

   திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களை சிறந்த பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் தொடர்பில் மேலதிக களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களை பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வாடகைக்கு வழங்கி அரச வருவாய்க்கு பங்களிப்பொன்றினை வழங்குதல்.

5. **பூச்சி புளுக்களற்ற தானியம்சார் உணவுக் களஞ்சியங்களின் சூழலொன்றினை உருவாக்குதல்.**

   உயர் தரத்துடனான உணவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு பூச்சி புளுக்களின் ஆபத்தில்லாத களஞ்சியசாலைகளினை முன்னெடுத்துச் செல்லுவதனூடாக நுகர்வோருக்கு தரத்துடன்கூடிய உயர்ரக தானியம்சார் உணவினை வழங்குதல்.

**நிறுவனக் கட்டமைப்பு**



**வெளிநாட்டு உதவியிடப்படும் கருத்திட்டங்கள்**

கருத்திட்டத்தின் பெயர் - 5000 மெட்றிக் தொன் புதிய காய்கறிகள் மற்றும் பழங்களினைக் களஞ்சியப்படுத்துவதற்கு வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளின் தொடரொன்றினை தம்புள்ள பிரதேசத்தில் நிர்மாணித்தல்.

**பங்களிப்புச் செய்யும் முகவர்** - இந்திய அரசு மற்றும் இலங்கை மத்திய அரசு

**கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு** - ரூபா. 650 மில்லியன் (அதில் ரூபா. 300 மில்லியன் இந்திய அரசின் நேரடி வழங்கல் என்பதுடன், மீதி நிதி இலங்கை மத்திய அரசினூடாக ஈடு செய்யப்படும்.)

**கருத்திட்டக் காலவரையறை** - ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட காலவரையறை 06 மாதங்களாயினும் நிர்மாணப் பணிகளின்போது இடைநடுவே ஏற்பட்ட கொவிட் 19 திடீர் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலையின் கீழ் 2022 யூன் மாதத்தில் இதன் கட்டுமாணப் பணிகளினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



களஞ்சியசாலைத் தொடரின் நிர்மாணச் செயற்பாட்டின்போது



வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியத் தொகுதியினை நிர்மாணித்ததன் பின்னரான தோற்றம்

## ( 02 ) முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2020 ஏப்ரல் 14 ஆந் திகதிய 20/0722/218/010 என்ற இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு கிடைக்கப் பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் ரூபா. 276.7 மில்லியன் ஒதுக்கீடுகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா. 100 மில்லியன் ஒதுக்கீடுகள் உணவு ஆணையாளருக்குக் கிடைக்கப் பெற்றது. சிறிய மற்றும் நடுத்தரளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினை மேலெழச் செய்வதற்கு தொழிற்பாட்டு மூலதனத் தேவைகளினை விரைவில் வழங்குவதற்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், அவ் ஒதுக்கீடுகளினை மாகாண ஆணையாளரினூடாக பதிவு செய்யப்பட்ட பல்வேறு சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, சந்தையில் அரிசி கிடைப்பதை நோக்கமாகக் கொண்டு, விரைவான சுழற்சிக் கடன் நிகழ்ச்சித் திட்டமொன்றாக செயலாக்குவதற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டம் உணவுத் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக நுகர்வோர்களுக்கு அரசின் கட்டுப்பாட்டு விலைகளின் கீழ் அரிசியினை விற்பனை செய்வதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டது.

அரசினால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தினைக் கட்டுப்படுத்தும் குளிரூட்டப்பட்ட கட்டிடத் தொடரின் நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டு பூராவும் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் இடம்பெற்றுள்ளதுடன், பெரிய வெங்காயத்திற்கு முன்னுரிமை வழங்கி காய்கறிகள் மற்றும் பழங்களினைச் சேமிப்பதே இதன் நோக்கமாகும். இதனூடாக சந்தையில் வழக்கத்திற்கு மாறான தளம்பல்களினைக் கொண்டிருக்கும் மரக்கறிகள் மற்றும் பழங்களின் விலைகளினைக் கட்டுப்படுத்துவதற்கும் தற்போது 40% அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களினைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் களஞ்சியக் கொள்திறனினை மேம்படுத்தும் நோக்குடன், ஹம்பாந்தோட்டை, பூசா, மட்டக்களப்பு மற்றும் கெக்கிராவ போன்ற களஞ்சியசாலைகளின் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டில் நிறைவடைந்துள்ளதுடன், உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மீதிக் களஞ்சியசாலைகளினை புதுப்பிக்கும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல் திணைக்களத்தின் எதிர்கால இலக்காகும்.

ஜெ. கிருஷ்ணமூர்த்தி,

உணவு ஆணையாளர்,

உணவு ஆணையாளர் திணைக்களம்,

2022 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதி.

# ( 03 ) நிதிசார் செயற்திறன்

## 3.1 நிதிசார் செயற்திறன் கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீட்டு 2021 | | குறிப்பு | உண்மை நிலை 2021 | திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 148,085,000 | 332,830,000.00 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 84,050,043 | 23,169,438.00 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 7,956,354 | 6,391,527.00 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 186,604,076 | 113,549,343.00 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **426,695,473** | **475,940,308.00** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **426,695,473** | **475,940,308.00** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 10,941,854 | 1,982,465.00 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | **415,753,619** | **473,957,843.00** | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | - | - | |
| 63,400,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 42,776,645 | 58,232,263.00 | |
| 32,150,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 31,208,742 | 22,259,884.00 | ஏசீஏ-2(ii) |
| 400,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 398,308 | 373,806.00 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 95,950,000.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **74,383,695** | **80,865,953.00** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 174,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 164,694,043 | 118,261,673.00 | |
| 800,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 682,120 | 94,677,877.00 | |

1

ஏசீஏ- எப்

**2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2021 | | குறிப்பு | உண்மை நிலை 2021 | உண்மை நிலை திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 148,085,000 | 332,830,000.00 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 84,050,043 | 23,169,438.00 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 7,956,354 | 6,391,527.00 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 186,604,076 | 113,549,343.00 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **426,695,473** | **475,940,308.00** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **426,695,473** | **475,940,308.00** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 10,941,854 | 1,982,465.00 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **415,753,619** | **473,957,843.00** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 63,400,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 42,776,645 | 58,232,263.00 | ஏசீஏ-2(ii) |
| 32,150,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 31,208,742 | 22,259,884.00 | |
| 400,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 398,308 | 373,806.00 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 95,950,000.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **74,383,695** | **80,865,953.00** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 174,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 164,694,043 | 118,261,673.00 | |
| 800,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 682,120 | 94,677,877.00 | |

1

## 3.2 நிதிநிலவரம் தொடர்பிலான கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| நிதி சொத்துக்கள் அற்றது | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 4,911,893,190.00 | 4,911,211,070.00 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 14,079,386.00 | 18,039,740.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 10,941,854.00 | 1,982,465.00 |
| மொத்த சொத்துக்கள் | | 4,936,914,430.00 | 4,931,233,275.00 |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (89,385,008.00) | (79,797,595.00) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 4,911,893,190.00 | 4,911,211,070.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 103,464,394.00 | 97,837,335.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 10,941,854.00 | 1,982,465.00 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 4,936,914,430.00 | 4,931,233,275.00 |

பக்க இலக்கம் 12 முதல் 51 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 52 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.................................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஜே. எம். பீ. ஜயவர்தன
பதவி : செயலாளர்
திகதி : 2022.02.24

J.M.B. Jayawardhana
Secretary
Ministry of Trade
No. 492, R. A. De Mel Mawatha,
Colombo 03.

.................................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஜே. கிரிஷ்ணமூர்த்தி
பதவி : உணவு ஆணையாளர்
திகதி : 2022.02.21

J. Krishnamoorthy
Food Commissioner
Food Commissioner's Department
Union Place
Colombo 02.

.................................
பிரதான கணக்காளர்
பெயர் : ஈ. எம். என். ஆர் . பண்டார
திகதி : 2022/02/21

E.M.N.R. BANDARA
Chief Accountant
Food Commissioner's Department
No. 330, Union Place
Colombo 02

## 3.3 *காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று*

ஏசீஏ- சீ

### 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2021** | திருத்தப்பட்ட 2020 |
| | ரூபா | ரூபா |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 184,492,238 | 105,587,156 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | - | - |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 148,085,000 | 332,830,000 |
| முற்பணங்களை அறவிடல் | 6,998,734 | 5,450,682 |
| ஏனைய பிரதான பேரேட்டு | 2,111,837 | 7,888,721 |
| வைப்புக்களின் பெறுகை | 84,050,043 | 23,169,438 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **425,737,852** | **474,925,997** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு**</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 317,221,062 | 445,977,212 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 398,308 | 373,806 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 8,738,379 | 1,202,981 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 10,941,854 | 1,982,465 |
| முற்பணக் கொடுப்பனவு | 3,996,000 | 3,999,919 |
| ஏனைய பிரதான பேரேட்டு | 5,337,145 | 2,763,505 |
| வைப்புக் கொடுப்பனவு | 78,422,984 | 18,626,109 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **425,055,732** | **474,925,997** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **682,120** | - |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |

5

| | | |
|---|---|---|
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு;** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 682,120 | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **682,120** | - |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(682,120)** | - |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு;*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.4 நிதிசார் கூற்றுக் குறிப்புகள்

## 3.5 வருமானத்தினைத் திரட்டுவதன் செயற்திறன்

ரூபா. ,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விவரம் | வருமான மதிப்பீடு | | திரட்டிய வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | ரூபா. | இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக |
| 20.02.01.01 | களஞ்சிய வாடகை (S) | 121,043 | 148,919 | 150,709 | 101.2 % |
| | இல்ல வாடகை | 6,908 | 6,908 | 6,376 | 92.3 % |

## 3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன்

ரூ. ,000

| ஒதுக்கீடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் நிறைவு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவின் % மாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடுகள் | இறுதி ஒதுக்கீடுகள் | | |
| மீண்டுவரும் | 95,950 | 95,950 | 74,384 | 77.60% |
| மூலதனம் | 475,000 | 475,000 | 465,171 | 97.90% |

**3.7** ***நி.பி. 208 இன் பிரகாரம் பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத்திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்.***

ரூபா. **000**

| தொடர் இலக்கம் | ஒதுக்கீடுகளினைப் பெற்ற அமைச்சு/திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடுகள் | இறுதி ஒதுக்கீடுகள் | | |
| 1 | ஒய்வூதியத் திணைக்களம் | ஒய்வூதியக் கொடுப்பனவு | - | - | 2,789 | - |

## 3.8 நிதிசாரா சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

ரூ. ,000

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விவரம் | 2021.12.31 ஆந் திகதிய பொருட் கணக்கெடுப்பு ஆய்வு அறிக்கையின் பிரகாரம் மீதி | 2021.12.31 ஆந் திகதிய நிதிநிலவர அறிக்கையின் பிரகாரம் மீதி | எதிர்வரும் காலத்தில் கணக்கிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட | முன்னேற்றத்தினை % மாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 3,489,302 | 3,489,302 | - | 100% |
| 9152 | எந்திரங்கள் | 31,534 | 31,534 | - | 100% |
| 9153 | காணிகள் | 1,390,376 | 1,390,376 | - | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள் | - | - | - | 100% |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | 100% |
| 9160 | நடந்து கொண்டிருக்கும் பணி | 88,747 | 88,747 | - | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | - | 100% |

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

Page No. 102-109

## ( 04 ) செயற்திறன் குறிகாட்டி

**நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டி**

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்த்த முடிவின் சதவீதமாக (%) உண்மையான முடிவு | | |
|---|---|---|---|
| | 100 %-90% | 75%-89% | 50%-74% |
| 100,000 மெ.தொ. பாதுகாப்பு அரிசி இருப்பு | - | பாதுகாப்பு அரிசி இருப்பினை முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான களஞ்சியசாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. | - |
| சந்தையில் அரிசி கிடைக்கக்கூடியதாக இருத்தல். | - | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசியினை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினைக் கண்காணிப்பதனூடாக சந்தையில் அரசி கிடைப்பதை முன்னெடுத்துச் செல்லுவதற்கு பங்களிப்புச் செய்தல். | - |
| நிறுவனத்தின் வளங்களினை சிறந்தவாறு முகாமை செய்வதற்கு உரிய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் | களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களினை வாடகைக்கு வழங்கி அரச வருமானத்திற்குப் பங்களிப்பொன்றினை நல்குதல். | - | - |

## ( 05 ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைவதன் செயற்திறன்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மூலம் அடையாளங் காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்காவது பசியினை முடிவுக்குக் கொண்டுவருதலாகும் (Zero Hunger ).

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றுப் பிரகடனத்திற்கமைவாக இலங்கையின் பிரதான நுகர்வுப் பொருளான அரசியினைக் களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான வசதிகளினை வழங்குவதற்கு உணவுத் திணைக்களம் பிணைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உற்பத்தி மற்றும் விநியோக மதிப்பீட்டுக் கால வரையறையினுள் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான களஞ்சிய வசதிகளை வழங்கும் நோக்கில் திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியங்களினை உணவுகளினைக் களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் பழுதுபார்க்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன

மேலும் நிலைபேறான விவசாயத்தினை மேம்படுத்தும் நோக்கிலும் மற்றும் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களினைக் குறைக்கும் நோக்குடனும் காய்கறிகள் மற்றும் பழங்களினைக் களஞ்சியப்படுத்துவதற்கு வெப்பநிலை மற்றும் ஒத்த ஈரத்பதம் கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியத் தொகுதியினை தம்புள்ள பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டாகும்போது தேசிய வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் சனத்தொகையின் விகிதத்தினை பாதியாகக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கில் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| இலக்கு/நோக்கு | இலக்கு | சாதனைக் குறிகாட்டிகள் | இது வரை சாதனையினைப் பெற்றுக் கொண்டதன் முன்னேற்றம் (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50-74 | 75-100 |
| பசியினை முடிவுக்குக் கொண்டு வருதல் (Zero Hunger ) | * உணவு விலைத் தளம்பலினைத் தடுத்தல். | *காய்கறிகள் மற்றும் பழங்களினைக் களஞ்சியப்படுத்துவதற்கு வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பு ஆரம்பம். | | | ✓ |
| | * உணவு இருப்பினை முன்னெடுத்தல். | * அரிசிப் பாதுகாப்பு இருப்பினை முன்னெடுப்பதற்கு நவீனபாணியிலான களஞ்சியசாலைகளினை நிர்மாணித்தல் | | | ✓ |

## ( 06 ) மனித வளத்தின் தோற்றுவாய்

### 6.1 ஆளணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 06 | 03 | 03 | - |
| மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| இரண்டாம் நிலை | 111 | 31 | 80 | - |
| ஆரம்ப நிலை | 94 | 70 | 10 | 04 |

நிறுவனம்சார் செயற்பாடுகளினை ஒழுங்காகவும், முறைசார் வகையிலும் மற்றும் விளைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு மனித வளப் பற்றாக்குறை தாக்கஞ் செலுத்தியுள்ளது. விசேடமாக சிரேஸ்ட நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஆளணியின் பற்றாக்குறை நிறுவனம்சார் செயற்பாடுகளில் தாக்கஞ் செலுத்தியுள்ளது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக் கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை | மொத்த முதலீடு (ரூ.'000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு) | வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| - | - | - | - | - | - | - |

- 2021 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியளிப்புக்கு எவ்வித உத்தியோகத்தரும் Covid 19 தொற்றுநோய் நிலையின் காரணமாக கலந்துகொள்ளவில்லை.

## ( 07 ) இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை) | இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமான விளக்கம் | இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள் |
|---|---|---|---|---|
| **01. பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணகுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணக்கம் | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இணக்கம் | | |
| 1.3 | வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | இணங்காமை | தற்போதைய திணைக்களத்தில் இம்முற்பணக் கணக்கு செயலாக்கப்படவில்லை | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணங்காமை | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | இணங்காமை | | |
| 1.6 | பிற | இணங்காமை | | |
| **02 . புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பராமரித்தல் (நி.பி. 445)** | | | | |
| 2.1 | பொதுநிர்வாக சுற்றுநிரூபம் 27/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதி ஏடு/ஆளுக்குரிய வேதனாதி அட்டைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.5 | சகல மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களினை (CIGAS) தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல் | இணக்கம் | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.9 | இழப்பு நட்டம் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.10 | பொறுப்புக்களின் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களின் பதிவேட்டினை (GAN – 20) நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல். | இணக்கம் | | |
| **03 . நிதி முகாமை தொடர்பிலான செயற்பாடுகள் (நி.பி. 135)** | | | | |
| 3.1 | நிதி அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்கள் பகிரப்படுதல். | இணக்கம் | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் நிறுவனத்தினுள் விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கக்கூடியவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 3.4 | 2014.05.11 ஆந் திகதிய 171/2004 என்ற இலக்க பொதுக் கணக்குகள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம், அரசின் ஊதிய மென்பொருள் பொதியினைப் பாவிக்கும்போது கணக்காளர்களின் முகாமையின் கீழ் நடவடிக்கைகளினை எடுத்தல். | இணக்கம் | | |
| **04 . வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்** | | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல். | இணக்கம் | | |
| 4.2 | வருடாந்தக் கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல் | இணக்கம் | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல். | தொடர்பற்றது | திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையினால் உள்ளகக் கணக்காய்வு திட்டம் செயலாக்கப்படவில்லை | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD) குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல். | இணக்கம் | | |
| 4.5 | வருடாந்த காசு பாய்ச்சல் கூற்றினை குறிப்பிட்ட தினத்திற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல். | இணக்கம் | | |
| **05 . கணக்காய்வு விசாரணைகள்** | | | | |
| 5.1 | கணக்காய்வாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணைகளுக்கும் மறுமொழிகளினை வழங்கியிருத்தல். | | | |
| **6 . உள்ளகக் கணக்காய்வு** | | | | |
| 6.1 | நி.பி. 134 (2) DMA/1-2019 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல். | தொடர்பற்றது | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையினால் அது தொடர்பற்றது. | |
| 6.2 | சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் விடையளித்திருத்தல். | தொடர்பற்றது | திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையினால் உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் முன்வைக்கப்படாமை. | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை முகாமைத்துவம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல். | தொடர்பற்றது | | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | தொடர்பற்றது | | |
| **07 . கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | | |
| 7.1 | DMA சுற்றுநிருபம் 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்த வகையில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாவது உரிய வருடத்தினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| **08 . சொத்து முகாமை** | | | | |
| 8.1 | 01/2017 என்ற இலக்க சொத்து முகாமை சுற்றிநிரூபத்தின் 07 வது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான தகவல்களினை கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு முன்வைத்திருத்தல். | இணக்கம் | | |
| 8.2 | மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 13 வது அத்தியாயத்தின் பிரகாரம் அச் சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல். | | | |
| 8.3 | அரச நிதிச் சுற்றுநிருபம் 05/201 இன் பிரகாரம் பொருட் கணக்கெடுப்பு ஆய்வினை முன்னெடுத்து உரிய அறிக்கைகளினை குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | இணக்கம் | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வில் வெளிக் கொணரப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகளினை, சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 8.5 | முதிர்வடைந்த பொருட்களினை அகற்றுதல் நி.பி. 772 இன் பிரகாரம் முன்னெடுத்திருத்தல். | இணக்கம் | | |
| **09 .** | **வாகன முகாமை** | | | |
| 9.1 | ஒதுக்கி வைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்தன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல். | இணக்கம் | | |
| 9.2 | வாகனங்கள் முதிர்வடைந்து 06 மாதங்களுக்குக் குறைவான காலப்பகுதியில் அகற்றுதல். | இணக்கம் | | |
| 9.3 | வாகன லொக் புத்தகங்களினைப் பேணும்போது அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்தல். | இணக்கம் | | |
| 9.4 | சகல வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இணக்கம் | | |
| 9.5 | 2016.12.29 ஆந் திகதிய 2016/30 என்ற இலக்க சுற்றுநிருபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களில் எரிபொருள் எரிவதை மீளவும் பரீட்சித்தல். | இணக்கம் | | |
| 9.6 | குத்தகை காலவரையறைக்குப் பின்னர் வரி வாகன லொக் புத்தகங்களின் முழுமையான உரிமையினை ஒப்படைத்திருத்தல். | இணக்கம் | | |
| **10 .** | **வங்கிக் கணக்கினை முகாமை செய்தல்.** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.1 | குறிப்பிட்ட தினத்தன்று வங்கி இணக்கக் கூற்றுக்களினைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றினைக் கணக்காய்வுக்கு முன்வைத்திருத்தல். | இணக்கம் | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல். | இணக்கம் | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிக்கொணரப்பட்ட மற்றும் இணக்கஞ் செய்யவேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம் மீதிகளினை ஒரு மாதக் காலப்பகுதியினுள் தீர்த்தல். | இணக்கம் | | |
| **11 . வழங்கல் பயன்பாடு** | | | | |
| 11.1 | செய்யப்பட்ட ஏற்பாடுகளினை அவற்றின் வரையறையினை மீறாத வகையில் செலவுகளினை ஈடுசெய்தல். | இணக்கம் | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் பிரகாரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டு இறுதியின் மீதி ஒதுக்கீடுகளின் வரையறையினைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு வருதல். | இணக்கம் | | |
| **12 . அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | | | |
| 12.1 | கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல் | இணக்கம் | | |
| 12.2 | பற்றாக்குறை கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்திருத்தல். | இணக்கம் | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதியினைத் தீர்த்திருத்தல். | இணக்கம் | | |
| **13 . பொது வைப்புக் கணக்கு** | | | | |
| 13.1 | தாமதமான வைப்புத் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல். | இணக்கம் | | |
| 13.2 | பொது வைப்புத் தொடர்பிலான வைப்புக் கணக்கினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்திருத்தல். | இணக்கம் | | |
| **14 . கட்டுநிதிக் கணக்கு** | | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியின் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல். | இணக்கம் | | |
| 14.2 | நி.பி. 371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால கட்டுநிதியினை அத்தகை பணி நிறைவடைந்து ஒரு மாத | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியினுள் தீர்த்தல். | | | |
| 14.3 | நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறாத தற்காலிக இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கு மீதியினை, திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்புரவு செய்தல். | இணக்கம் | | |
| **15 . வருமானக் கணக்கு** | | | | |
| 15.1 | உரிய விதிமுறைகளுக்கிணங்க திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் இடம்பெற்றிருத்தல். | இணக்கம் | | |
| 15.2 | திரட்டப்பட்டிருந்த வருமானத்தினை வைப்புக் கணக்குக்கு வரவிடாது நேரடியாக வருமானத்திற்கு வரவிட்டிருத்தல். | இணக்கம் | | |
| 15.3 | நி.பி. 176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல். | இணக்கம் | | |
| **16 . மனித வள முகாமைத்துவம்** | | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினை முன்னெடுத்தல். | இணக்கம் | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கு கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 16.3 | 20.09.2017 ஆந் திகதிய MSD சுற்றுநிரூப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல். | இணக்கம் | | |
| **17 . பொதுமக்களுக்குத் தகவல்களினை வழங்குதல்** | | | | |
| 17.1 | தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களினை வழங்கும் ஆவணமொன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுத்தல். | இணக்கம் | | |
| 17.2 | நிறுவனம் தொடர்பிலான தகவல்கள் அதன் இணையத் தளத்தினூடாக வழங்கப்பட்டதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளினூடாக நிறுவனம் தொடர்பில் பொதுமக்களின் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | புகார்கள்/குற்றச்சாட்டுக்களினை வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல். | | | |
| 17.3 | தகவல்களினை அறிந்துகொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10 வது பிரிவின் பிரகாரம் வருடமொன்றுக்கு இரு தடைவை அல்லது வருடமொன்றுக்கு ஒரு தடைவை அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| **18 . பிரஜைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்** | | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2018 (1) என்ற இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபம். | இணக்கம் | | |
| 18.2 | அச்சுற்றுநிருபத்தின் 2.3. பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/பயனாளிகள் பட்டயத்தினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கும் செயற்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் நிறுவனங்களினூடாக மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| **19 . மனித வளத்திட்டத்தினைத் தயாரித்தல்** | | | | |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 02/2018 இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல். | இணங்காமை | கொவிட் 19 தொற்றுநோய் நிலையின் காரணமாக பயிற்சியினை வழங்குவதற்கு முடியாமை. | |
| 19.3 | மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பதவியணிக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பம் கைச்சாத்திடப்பட்டிருத்தல். | இணக்கம் | | |
| 19.4 | மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 6.5 வது பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை மேம்படுத்துதல், திறன் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல். | | | |
| **20. கணக்காய்வுப் பந்திகளுக்கு மறுமொழிகளினை வழங்குதல்.** | | | | |
| 20.1 | கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல். | இணக்கம் | | |